# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 13TH FEBRUARY, 1981 No. 7

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

RECEIVED 1981-2-19 PERIODICALS DIVISION

***Subscription***

Inland: Rs. [illegible] per year

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

*JDCSI*

## CSI General Secretary to Address Jaffna Diocesan Council

The Rev. (Dr.) Victor Premsagar, the General Secretary of the Church of South India has accepted the invitation of Bishop Ambalavanar to participate in the 34th Annual Sessions of the Jaffna Diocesan Council to be held at Vaddukoddai from February 26 – 28 Dr. Premsagar will be accompanied by his wife.

An Old Testament Scholar and formerly Principal of Andhra Christian Theological College, Dr. Premsagar was elected General Secretary by the Synod of the CSI, three years ago.

Dr. Premsagar will address the Sessions of the Council on 27-2-81, when Office - bearers of the JDCSI Churches to whom invitations will be extended will also be present. He will also conduct the two Bible studies on the 26th and 27th of February at the Sessions of the Council.

**Ordination Service**

*Mr. S. C. Arnold*, Worker in charge of the Delft Church and the *Rev. A. Jeyakumaran*, Worker in charge of the Chankanai Church will be ordained by the Rt. Rev. D. J. Ambalavaner as Deacon and Presbyter respectively, of the J.D.C.S.I., at the same Service at the Cathedral Church, Vaddukoddai on Saturday, the 28th of February, the final day of the Diocesan Council Sessions. Dr. Premsagar will preach at this Service.

**Garden Party and Cultural Pageant**

A Garden Party and Cultural Pageant will be a feature of the Council Sessions on the Second day. Besides the delegates, the Secretaries and Treasurers of JDCSI Churches, Sunday School Superintendents, Youth League Presidents and Women's Fellowship representatives will also participate at the Garden Party and Pageant and will have also the opportunity of meeting our guests from India — Dr. and Mrs. Premsagar.

**Vaddukoddai Church Women's Auxiliary**

Mrs. Premsagar will be accorded a reception by the Vaddukoddai Church Women's Auxiliary on 26-2-81 at a Garden Party. The occasion will be availed of by the Church Women's Auxiliary to extend a welcome to all the lady delegates from the Churches who will be attending the Council Sessions. Mrs. Premsagar is expected to address this gathering.

**Development Priorities**

An important item on the agenda of the Diocesan Council Sessions this year will be the Development Programme of the Diocese envisaged for the next five years (1981—1985). This programme will be presented to the Synod of the CSI at its sessions this year for assistance.

## KNH Approves Arulmanai

At the February meeting of the KNH Council of Sri Lanka held in the Bible House, Colombo the President of the Council Rev. Basil Rajasingam announced that the Kinder Noth Hifle Organization of West Germany had given approval for recognizing Arulmani Boy's Home run by the Jaffna Diocese of the CSI for the support of sixty-five children by the KNH. The Diocese had spent a lakh and a quarter rupees on renovating and another quarter lakh rupees on equipping the old ACM Press and workshop building to house the children and opened the Home on 14th December 1979. The cost of running the house for the first six months was also borne by the Diocese. Most of the nearly two lakhs of rupees so required was raised as voluntary contributions from individuals, Churches, business house and institutions. The UCBWM helped with a grant of US $8000/—. A long list of deserving applicants await admission to the Home and the Boys' Home Committee is exploring possibilities of opening another Home elsewhere in the Peninsula.

*IN BRIEF*

**In Aid of the Disabled**

The annual *Valentine Ball* of the Sri Lanka—American Society will be held this year on 14-2-81 at the Hotel Ceylon International in aid of the Disabled. Some 350 people are expected to attend this 'Ball'.

A feature of the 'Ball' will be fund raising competitions. The first prize in the ticket draw will be *two* tickets to Los Angeles, donated by Singapore Airlines. The Society hopes to raise at least Rs. 30,000 from the 'Ball'.

**Next General Election**

Sri Lanka will have *21* electoral districts in which *196* members of Parliament will be elected under the proportional Representation System, at the next general election.

A Proclamation to this effect has been issued under the seal of the President in the Gazette.

The Delimitation Commission which made these recommendation are Mr. G. P. A. Silva (Chairman), Mr. V. Manicavasagar, and Mr. A. L. M. Hashim.

## Church News from Abroad

**First Woman Bishop**

Dr. Marjorie S. Mathews (64) of Traverse City, Michigan, has been elected Bishop by the United Methodist Church at its North Central Jurisdictional Conference held in Ohio. Dr. Mathews described her reaction to the election as "comparable to being the first woman on the moon."

Dr. Connie Parvey, Director of the WCC's study on Women and Men in the Church commenting on Dr. Mathews's analogy said "I like the analogy that the new Bishop gives of walking on the moon. It is a different space, but you still have to put one foot in front of the other. You don;t just stand there."

**Eucharist with Children**

There is no justifiable theological reason to exclude baptised children from eucharistic celebrations but their participation must satisfy certain criteria of preparation and various conditions according to the tradition, practice and usage in the Churches which meet together.

This is the substance of the conclusion reached by more than 40 theologians who met recently in *Bad Segeberg* in the Federal Republic of Germany.

In the Orthodox Churches, participation of children is accepted practice. In most Protestant Churches, there is delay in children's participation while the Roman Catholic Church receives children for their first Communion from the age of *eight*.

The Consultatisn believed that there should be developed in the Churches, specialised ministries for children and that there should be a rethinking of the form and content of the eucharist in order to render it attractive for children.

## February Fiesta in aid of Casuarina Camp House

The four Christian private schools in Jaffna co-operated with the Casuarina Camp House Committee to raise funds for the renovation and maintenance of the JICCF Camp House by contributing items for a variety entertainment show in Veerasingam Hall, Jaffna on 7th February, 1981. A Tamil play by Chundikuli Girls' College, an English operetta by Uduvil Girls' College, Tamil classical and English pop music by St. John's College and an English play by Jaffna College were performed to a near capacity audience. The Camp House Committee was formed last year after the JICCF had transferred the trusteeship of the property from Jaffna College to the American Ceylon Mission. The Committee plans to add extensions to the present building and equip the plant for better utilization.

## Vacancy

There is a vacancy for a Medical Officer. Minimum qualifications MBBS of a recognised University.

Apply before 28th instant to:

**Medical Superintendant,**
Mc Leod Hospital,
Inuvil,
Chunnakam.

*For the Record*

## Self - defence Clarified

The Inspetcor - General of Police, Mr. Ana Seneviratne, has clarified the inalienable right given to the people by law which people do not generally use.

He has cited Sections 89 and 90 of the Penal Code which read thus :—

"Nothing is an offence which is done in the exercise of the right of private defence. Every person has the right (subject to restrictions contained in section 92) to defend."

(1) His own body and the body of any other person against any offence affecting the human body.

(2) The property, whether movable or immovable of himself or any other person against any act which is an offence falling under the definition of theft or robbery, mischief or criminal trespass.

## Personal

*Mr. T. Gunaseelan* was appointed as a Vice Principal of St. John's College, Chundikuli following the retirement of Mr. V. R. Amarasingam at the end of last year. Mr. Gunaseelan a son of the former burser of the College Mr. M. S. Thambithurai was the Supervisor of the Middle School at the time of appointment.

*The Rev. S.Manopavan*, who went to USA in September 1980 under the programme of mission partnership between Rhode Island Conference of Churches and the JDCSI has completed his course of part time studies at the Andover Newton Seminary and is presently attached to the large hospital in Providence for chaplaincy training until May 1981. He attended the Autumnal Meeting of the Congress and spoke about his home Church to the delegates. In January the Church and Ministry Committee of the R. I. Conference elevated him to the position of "Honorary Minister of Standing in Coference". His wife Mrs. Ranji Manopavan will be joining him shortly for a period of two months.

*Mr. S. Rajanayagam*, relinquished his duties as Director of the Jaffna College Technical Institute at the end of 1980 having served nearly seven years. *Prof. George Somasundaram* the Dean of the Institute assumed duties as Director in January 1981.

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


## தாரகை ஒளி

பேதை தன் பேச்சினால் தன்னைத் துயரப்படுத்துவான்;
தவளை தன் வாயினால் கெடும். —பழமொழி நானூறு.


மலர் 141] 13 — 2 — 1981 [இதழ் 7


## இலங்கை கிறிஸ்த மாணவர் இயக்கம்

இலங்கை கிறிஸ்த மாணவர் இயக்கத்தின் (S. C. M.)ன் இன்றைய நிலையைக் கண்டு மனங்கலங்காத பட்டதாரிகள் எவருமே இருக்கமுடியாது. கலாநிதி நைல்ஸ். சேவக் செல்வரத்தினம், ஹண்டி பேரின்பநாயகம் முதலிய பெரியார்களை உருவாக்கிய இந்த மகோன்னத இயக்கம் இன்று பொதுவுடைமை வாதமும், சுரண்டலும் பற்றிப் பேசும் ஒரு சிறிய குழுவாக, மாணவர்கள், ஆசிரியர்களின் ஆதரவை முற்றிலும் இழந்து செயற்பட்டு வருகின்றது. இதற்குக் காரணமென்ன? பிஷப் விக்கிரமசிங்க, வண. செலஸ்தீன் பெர்ணண்டோ முதலிய அரும் பெரும் குரவர்கள் பல்கலைக்கழகங்களில் இல்லை என்கின்றனர் ஒரு சாரார். கிறிஸ்தவர்கள் தொகை பல்கலைக்கழகங்களில் இல்லை என்கின்றனர் இன்னொரு சாரார். சிரேஷ்ட நண்பர்களின் அசிரத்தை காரணம் என்கின்றனர் மற்றுமொரு சாரார்.

காரணம் எப்படியிருந்தாலும் மாணவ கிறிஸ்தவ இயக்கம் நற்பணியாற்றி வந்தது. தொடர்ந்தும் நற்பணியாற்றும் வல்லமை அதற்குண்டு. கிறிஸ்த மாணவ இயக்கத்தினால் வளர்ந்தவர்கள் அதன் வளர்ச்சியில் தொடர்ந்து சிரத்தை கொண்டால் அந்த இயக்கம் தொடர்ந்து வளரலாம். அதன் வருடாந்தக் கூட்டங்களுக்குப் போவதற்குச் சற்று நேரத்தை ஒதுக்கிவைத்தால் கிறிஸ்த மாணவ இயக்கத்தினைக் காப்பாற்றலாம், வளர்க்கலாம்.

## தத்துவ போதகர் நினைவு

இம்மாதம் பதினைந்தாந் திகதி தத்துவ போதகரின் நினைவு தினமாகும். De Nobili என்ற இத்தாலியப் பெயர் பெற்ற இந்த இத்தாலிய குரவர், உயர் சாதி இந்துக்களைக் கிறிஸ்தவர்களாக்கும்படி மதுரையில் வந்து தொண்டாற்றியவர். இந்துப் பிராமணர்கள் விரும்பும் கோலம் பூண்டு, தூய மரக்கறி உணவுகளையே உண்டு கடும் விரதங்களை அனுஷ்டித்தவர். அவரது வாழ்க்கை முறையினால் அநேக பிராமணர்கள், கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்டனர். ஆனால், அவரது மதப் பிரசார முறைகளில் தவறுதல்களைக் கண்ட உரோமன் திருச்சபைத் தலைமைப் பீடம் அவரை அடிக்கடி விசாரணைக்கு அழைத்தது. "இவரும் ஒரு பரங்கியரே" என்று உயர்சாதி இந்துக்கள் முடிவுக்கு வந்தனர். தத்துவ போதகர் தோல்வியைக் கண்டு மனம் கலங்கவில்லை தொடர்ந்தும் பணியாற்றி வந்தார் தமிழில் முதன்முதலாக எளிய இனிய உரைநடையில் நூல்களை எழுதிய பெருமை இவரையே சாரும். "ஆத்ம நிர்ணயம்," "சரீர நிர்ணயம்", "தத்துவக் கண்ணாடி", "இயேசுநாதர் சரித்திரம்" 'என்பவை இவர் எழுதிய நூல்கள்.

தத்துவ போதகரின் முறைகளில் தவறுதல்கள் இருந்திருக்கலாம். ஆனால் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்காகத் தன் உடலையும் உள்ளத்தையும் அர்ப்பணித்த மகாவீர தியாகிகளில் தத்துவ போதகர் முதலிடம் பெறுபவர்களில் ஒருவர் இந்திய திருச்சபை வரலாற்றில் மூன்று வருடங்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. 1906 தத்துவ போதகர் மதுரைக்கு வந்த வருடம். 1706 சீகன்பால்கு தரங்கம்பாடி வந்த வருடம். 1806 றிங்கிள் தோப் மயிலாடி வந்த வருடம். இவை இந்திய திருச்சபையின் முக்கிய படிக்கற்கள். முதலாவது படிக்கல்லை அமைத்த தத்துவ போதரின் புனித நாமம் வாழ்க

### செய்திச் சிதறல்

### கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு புதிய மதகுரு

கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு மதகுருவாக இதுவரை காலமும் பணியாற்றிய வண. செலஸ்தீன் பெர்ணண்டோ இந்த மாதத்துடன் அப்பதவியிலிருந்து இளைப்பாறுகின்றார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மதகுருவாகக் கடைசியாக வழிபாட்டினை இம்மாதம் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்துகின்றார். புதிய மதகுருவாகக் கலாநிதி விஜேத் இராமச்சந்திரன் நியமிக்கப்படவிருக்கின்றார்.

### டெய்லி நியூஸ் பத்திரிகையின் புதிய ஆசிரியர்

சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகையின் புதிய ஆசிரியராகத் திரு. B. H. S. ஜெயவர்தனா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுண்டிக்குளி பரிசளிப்பு விழா

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அடுத்த தவணை ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது. பரிசளிப்பு விழாவின் பிரதம அதிதியாக மகாகனம் D. J. அம்பலவாணர் கலந்துகொள்ளவிருக்கின்றார்.

### மாசி மாதப் பல்சுவை விருந்து (February Fiesta)

காரைநகரிலுள்ள கசூரினா தியானப் பாசறையின் புனருத்தாரணப் பணிக்காக இம்மாதம் 7-ந் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு கலை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வைத்திய கலாநிதி யோகு பசுபதியும் திருமதி நளாயினி பசுபதியும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். உடுவில் மகளிர் கல்லூரியினர் ஓர் ஆங்கில நாட்டிய நாடகத்தினையும் (Operetta), யாழ்ப்பாணக் கல்லூரியினர் ஓர் ஆங்கில நாடகத்தினையும் நடாத்தினர். சென். ஜோன்ஸ் கல்லூரியினர் சில இசை நிகழ்ச்சிகளை வழங்கினர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியினர் 'சம்பந்தம்' என்னும் மொழி பெயர்ப்பு நாடகத்தினை நடித்துக் காட்டினர். மகாகனம் டி. ஜே. அம்பலவாணர் வரவேற்புரை நிகழ்த்தினார். பெருந்திரளான மக்கள் இக்கலைநிகழ்ச்சிகளைக் காண வந்திருந்தனர்.

### கிறிஸ்தவம் போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி முகாம்

இலங்கைக் கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும், கிறிஸ்தவ சமயத்தை ஒரு பாடமாகப் போதிக்கும் ஆசிரியர்களுக்கென ஒரு பயிற்சி முகாம் பண்டாரவளையில் நடத்தப்படவுள்ளது. ஐந்தாம் வகுப்பிற்குட்பட்ட மாணவர்களைக் கற்பிப்பவர்களுக்கு ஏப்ரில் மாதம் 25-ந் திகதி தொடக்கம் 29-ந் திகதி வரையிலும், சிரேஷ்ட வகுப்பு ஆசிரியர்களுக்கும் உயர்தர வகுப்பு ஆசிரியர்களுக்கும் 29-ந் திகதி தொடக்கம் மே மாதம் இரண்டாந் திகதி வரையிலும் நடத்தப்படவுள்ளது. இப் பயிற்சி முகாம்களில் பங்குபற்றும் ஆசிரியர்களுக்குப் பிரயாணச் செலவும் தங்குமிட வசதிகளும் வழங்கப்படவிருக்கின்றன.

### அத்தியட்சாதீன சங்க கூட்டத் தொடர்

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீன சங்கத்தின் (Council) வருடாந்தக் கூட்டத் தொடர் இம்மாதம் 26-ம், 27-ம், 28-ம் திகதிகளில் வட்டுக்கோட்டையில் நடைபெறவிருக்கிறது.

### சாவகச்சேரியில் கடுகதி நிற்கின்றது

மாலை 6.20க்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும், மாலை 9-05க்குக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் புறப்படும் புகையிரதங்கள் இப்பொழுது சாவகச்சேரியிலும் தரித்துச் செல்கின்றன. நுணுவில் திருச்சபையைச் சேர்ந்த திரு. S. S. முத்தையா அவர்களின் முயற்சியினாலேயே இம்மாற்றம் ஏற்பட்டதெனத் தெரிகிறது.

### இலங்கையில் ASFOR மகாநாடு

உலகக் கிறிஸ்த மாணவர் பேரவையின் (WSCF) செயலாளர் பயிற்சிப் பாசறை இம்மாதம் 28-ந் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 28-ந் திகதிவரை நீர்கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. முப்பது நாடுகளிலிருந்து மாணவ பிரதிநிதிகள் இப்பயிற்சிப் பாசறையில் கலந்துகொள்ளவிருக்கின்றனர். JICCF பிரதிநிதியாகத் திரு. எஸ். குருபாதம் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றவிருக்கின்றார்.

### இலங்கையில் மீண்டும் நைஜீரியக் கோஷ்டி

பட்டதாரி ஆசிரியர்களை நைஜீரியாவுக்குத் தெரிவு செய்யும் நைஜீரியக் கோஷ்டி இம்மாதம் மீண்டும் இலங்கை வந்துள்ளது. நம்நாட்டு பட்டதாரி ஆசிரியர்கள் நைஜீரியாவில் சாதாரணமாக இருபத்து ஈராயிரம் ரூபாவை மாதாந்த வருமானமாகப் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேனீர் விலை அதிகரிப்பு

சீனி விலை அதிகரிப்பைத் தொடர்ந்து தேநீர் விலை அதிகரித்துள்ளது பால் தேநீர் இப்பொழுது ரூபா 1-25க்கு விற்கப்படுகிறது. தேநீர் 60 சதமாக விற்கப்படுகிறது.

### பரி. யோவான் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் கிரிக்கட் கோஷ்டிக்கும், யாழ். பரி. யோவான் கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற 40 ஓவர் கிரிக்கட் போட்டியில் பரி. யோவான் கல்லூரி கிரிக்கட் கோஷ்டி 9 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக மாணவர் கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய பரி. யோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் பி. ஜெயக்குமார் 18 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும், செல்வன் எஸ். விக்கினபாலன் 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியினர் 1 விக்கட்டை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர். இக் கோஷ்டியில் விளையாடிய செல்வன் எஸ். சிவநாயகம் வெளியேறாமலே 56 ஓட்டங்களையும், செல்வன் என். டி. இரவீந்திரா வெளியேறாமலே 30 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### மெதடிஸ்த வாலிபர் சங்கம் புறக்கோட்டை

#### புதிய உத்தியோகஸ்தர்

இவ் வாலிபர் சங்கம் புது வருட குழுவை 25-1-81-ல் மெதடிஸ்த ஆலயத்தில் கூடி, வணக்கத்துக்குரிய எபநேசர் தலைமையில் தெரிவு செய்தது.

தலைவர் :- வண. எபநேசர் ஜோசப்.

செயலாளர் :- திரு. இராஜதுரை கோயில்பிள்ளை.

பொருளாளர் :- திரு. பிரேமகுமார் செல்வராஜா.

துணைத் தலைவர் :- செல்வி க. சாந்தா.

துணைச் செயலாளர் :- தி[illegible] சிலன்.

துணைப் பொருளாளர் :- தி[illegible]மதி டே. வசந்தி.

ஏனைய குழு அங்கத்தவர்கள்

திருவாளர்கள் :- அதிஷ்டகுமார், வின்சண்ட், இரட்ணகுமார், சாந்தகுமார், ஜோசப், ஜெயராம், ஜோன் நைட்.

செல்விகள் :- விநோதராணி, பத்மினி, ஸ்டெலா.

# கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, ஒரு பெரிய சமூக நல சீர்திருத்தவாதி

இது. டக்ரர் ஜேம்ஸ் மேதர் போதகரின் ஒரு பிரசங்கம்; ஆங்கிலத்தி லிருந்து தமிழாக்கியவர், திருமதி இசபெல் அற்புதநாதன்.

பலவிதமான சமூகநல சீர்திருத்தங்கள் அதாவது "சோசலிசம்" நிலவுகின்றன. 2000 வருடங்களுக்கு முன்பு இயேசு நாதர் ஆதரித்த "சோசலிசம்" இப்போ நிலவும் சகல சோசலிசங்களிலும் பார்க்க மேலானது. (சோசலிசம் என்ற சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் கிடையாத பட்சத்தில் சமூகவியல் புஸ்தகங்களோ, சஞ்சிகைகளோ, மார்க்கத் தலைவர்களோ சோசலிசம் என்ற பதத்தையே பாவிக்கின்றனர்.)

இயேசு மனிதனின் ஆழமான தேவைகளை உணர்ந்து அவனுக்கேற்ற நிரந்தரமான சுயாதீனம், புது உலகத்திற் புதுவிதமான சுயாதீனம், மனிதத்தன்மைக்கேற்ப வாழ்க்கை நடத்துவதற்கேற்ற வசதிகள், சமாதானம், பொருளாதார நிறைவு உடைய வாழ்க்கை, வறுமை, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசங்களினுல் அல்லது வேறு எந்தத் தாக்குதல்களுமில்லாமல் தனி மனிதன் தனியான சுயநிர்ணய உரிமையுடன் வாழ வழிவகுக்கப்பட வேண்டுமென்பதே இயேசுக் கிறிஸ்து நாதரின் சோசலிசமாய் இருந்தது; இருக்கிறது என்றும் செல்லலாம்.

பிரிட்டிஷ் பாராளுமன்ற House of Commons அங்கத்தவர் ஒருவர் சில காலத்துக்கு முன் உலகத்தில் 50 விதத்திற்கு மேலான சோசலிசங்கள் நிலவுகின்றன என்று சொல்லக் கேட்ட போது நான் ஆச்சரியப்பட்டேன். உண்டே! உண்மையே! வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறுவிதமான சோசலிசங்கள் நிலவுகின்றன என்பதை நான் அறிவேன். அவைகள் இன்னதின்னதென்பதை அறியேன்.

இரண்டு விதமான சோசலிசங்கள் உண்டு. ஒன்று சுயாட்சியின் சோசலிசம், மற்றது கொம்யூனிச சோசலிசம். இன்னும் இவை இரண்டும் பலபல கிளைகளையுடைய சோசலிசங்களாகின்றன.

இன்றைக்கு எங்கள் முக்கிய நோக்கமும் விசயமும் என்னவென்ருல், "இயேசு தாமே ஒரு பெரிய சமூகநல சீர்திருத்தவாதி." ஆகவே நாம் இங்கு அவர் கொண்டிருந்த சோசலிசத்திற்காக அவர் எவ்வாறு உழைத்து வாழ்ந்து காட்டினுர் என்பதைப் பற்றிச் சிந்திப்போமாக.

(1) மானசீக நோக்கு

உலகத்திற்கேற்ற சோசலிசமாவது மனிதப் பண்பாடுடையதாயிருக்க வேண்டும். கரடியைப்போன்ற புலி போன்ற, நகங்களால் சதைகளைக் கிறிக்கிழிக்கும் தீவிரவாதிகளையல்ல; மேலானவர்கள் கீழானவர்களை நசுக்கும் தன்மையுடையதாய் இல்லாமல் அதாவது 'அல்சேசன்' நாய் தனது எசமானின் கையில் உள்ள சங்கிலிப் பிடிப்பில் நிற்கும் போது அவருக்கு உண்மையும் நன்றியும் உள்ளதாய் இருந்து மற்றவர்களைக் கீறிக் கிழிக்கும் நோக்குடையதாய் இருப்பதைப் போன்ற சோசலிசம் உகந்ததல்ல.

எந்த வாதியும் ஒரு நாட்டைக் காப்பவனே உயர்த்துபவனே அல்ல. இச்சையின் வழி தீய பழக்கங்கள் பேராசை, எரிச்சல், சுயநல நோக்கு ஆகியன மனிதனின் உள்ளான தீய பழக்கங்கள் ஒவ்வொருவனையும் விட்டு நீங்கும் வரைக்கும் எந்த ஒரு நாடும் முன்னேறப்போவதில்லை இதைத்தான் இயேசுக் கிறிஸ்துநாதர் பலவழிகளிலும் வற்புறுத்திக் காட்டினர்.

ஒரு நாடு முன்னேறவேண்டுமாளுல் அந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிமனிதனும் திருந்த வேண்டும். அவன் தனது உள்ளான தன்மையை மாற்றி அமைக்க வேண்டும். மேலே கூறப்பட்ட தீய பழக்கங்கள், வன்செயல்களை ஒழிக்க வேண்டும்.

தனது சுயநலத்தைப் பாராமல் பிறர் சந்தோசமாக வாழ வழிவகுக்க வேண்டும். தனது சாதி, தனது வர்க்கம் முதலியவற்றின் முன்னேற்றங்களில் கருத்தாயிருக்காமல் சாதி, மத பேதம் இல்லாமல் சகல மனிதரையும் நன்மை விருத்திக்குக் கொண்டு வரப் பிரயாசைப்படவேண்டும்.

பிழையான சோசலிசம் முதலாளித்துவ வாதிகளை நல்ல நிலையில் வைத்துக்கொண்டு, வறியவர்களை இன்னும் வறியவர்களாக்கிக் கொண்டு, அவர்களுடைய பாடுகள் துன்பங்களை இன்னமும் மிகைப்படுத்துகின்றது. முடிவென்ன? வறுமையில் உள்ளவன் இன்னும் வறுமைப் பிணியால் மாண்டு மடிவதும், பஞ்சமான சர்க்கரைகளில் உழல்வோர் தூக்கி நிறுத்தப்படாதிருப்பதுமே. தன் தேசமுள்ள அன்பானது உண்மையானதுமில்லை. தேசபக்தியானது தனிப்பட்ட சாதியின் உயர்வைக் கருதியதாய் ஒரு தனிப்பட்ட கட்சிதான் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்ற கொள்கை இருக்குமளவில் அது உண்மையான நாட்டுப் பக்தியுமல்ல.

பேர்க் Burke என்பவரின் கோட்பாட்டின்படி ஒரு நாட்டை மக்கள் நேசிக்க வேண்டுமேயாளுல் அந்த நாடு மக்களால் நேசிக்கப்படக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். சிறிலங்காவின் பிரசைகளாகிய நாம் நமது கட்சி, சாதி, மத வேறுபாடுகள் யாவற்றையும் நீக்கிவிட்டு சிறிலங்காவின் முன்னேற்றத்தை மாத்திரம் நமது குறிக்கோளாகக்கொண்டு, ஒவ்வொரு பிரசையின் முன்னேற்றத்தையும் மனதில் கொண்டு, ஆணே, பெண்ணே, ஒரு சிறுபிள்ளையோ எனது குலம், சாதி, பணம், வறுமை, மொழிப் பிரச்சினை, கட்சிப் பாகுபாடு, படிப்பு, அந்தஸ்து முதலியவைகளைக் கொண்டு எனக்கு அநீதி இழைக்கப்படவில்லை நீதியே அளிக்கப்பட்டுவருகிறது என்று உணர்கின்ற வாழ்க்கை கிட்டு மட்டும் சிறிலங்கா உயர்ந்த நிலையை அடையப் போவதில்லை. இப்படியான முதற் படைக் காரணங்கள் இல்லாத சோசலிசம் சிறிலங்காவை உயர்ந்த தேசமாக்குவதை விட்டு இன்னும் இன்னும் எங்கள் மக்களின் துன்புறுத்தல்களை வளர்த்துக்கொண்டு சிறிலங்கா இழிவான நிலைக்கே தள்ளப்படும் வாய்ப்பு வரும்.

2. சகோதரத்துவம்

"இயேசுக் கிறிஸ்துநாதர் மனிதனை மனிதன் சகோதரனுகப் பாவிக்கும் பிரமாதமான உரிமையை வற்புறுத்தினர்."

இயேசு பிறந்த இடமோ சாதிக் கட்டுப்பாடுகள், பொருமை நிறைந்த இடமாயிருந்தது. யூதர்கள் சமாரியரை வெறுத்து ஒதுக்கினுர்கள். ரோமரைத் தங்கள் பகைவர்களாய்க் கருதி மற்ற எல்லாச் சாதியினரும் தங்களிற் பார்க்கத் தாழ்ந்தோர் என்றே கருதினர். யூதர்கள் இயேசுவை எதிர்த்தமைக்கும் இறுதியாக அவரைச் சிலுவையில் அறைவதற்கும் மூலகாரணம் யாதெனில், இயேசு போதித்த போதனையின்படி வாழ்ந்து காட்டிய இந்த சகோதரத்துவ சோசலிசமே.

இயேசு இந்த சகோதரத்துவ சோசலிசத்தை நன்ருகத் தனது 'திராட்சைத் தோட்டத்தில் வேலை கொள்ளப்பட்ட கூலியாட்களின்' உவமை மூலமாகத் திருப்திகரமாகத் திருஸ்டாந்தப்படுத்துகிருர். சமமான சம்பளம், வேலை தொடங்கின நேரம் முடிந்த நேரத்தை மனதிற்கொண்டு வேலை செய்யாமல் நின்றவர்களுக்கும் வழங்கப்பட்டது என்று உவமை விளக்குகிறது யாவரும் இந்த உவமையை நன்கு வாசித்துக் கற்றுக்கொள்ள வேண்டியது. மத்தேயு சுவிசேஷம் 20-ம் அதிகாரம் 1 — 16 வசனங்களில் நன்கு குறிக்கப்பட்டுள்ளது. மத்தேயு 7 : 12-ல் 'ஆதலால் மனுசர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்' என்று கூறியிருக்கிருர்.

சில மனிதர் தகுந்த கல்வி, சரியான சமூக சுற்ருடல் போன்றவை, தன்னுலேயே சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுத்து நாட்டை வளமுள்ளதாக்குமென நினைக்கிருர்கள். இந்த நம்பிக்கையானது உண்மையாகவே மனிதன் சுயமாகவே நல்லவனே என்ற பிழையான ஆலோசனையிற் தங்கியுள்ளது. மனிதனின் சுயமாகவே தீமை செய்யும் சுபாவம் உண்டென்பதே உண்மை. இயற்கையாகவே தீமை செய்யும் நோக்குடையவன். அத்தோடுகூட நாம் வாழுகின்ற இந்த லோகமானது மனிதனைத் தீமை செய்யத் தூண்டிவிடக்கூடிய வல்லமைகள் அடங்கியதாய் இருக்கின்றது. ஒரு நாட்டை சட்ட திட்டங்களை ஆக்கி நிலைநாட்டுவதால் மாத்திரம் திருத்திவிட முடியாது. மனிதனின் உள்ளம் திருந்த வேண்டும். இயேசுக் கிறிஸ்து நாதரின் சோசலிச திட்டம் மனிதனின் 'உளமும் சித்தையும்' திருந்த வேண்டுமென்பதே.

மனிதத்துவம் கடவுளின் குடும்பம். இக்குடும்பத்திற்குத் தேவன் தாமே தலைவன். இக்குடும்பத்தில் எல்லா மக்களும் சகோதரரும் சகோதரிகளுமேயாவர். இந்த அடிப்படை உண்மையை ஏற்றுக் கொண்டு நடந்தால் சமாதானத்தையும், ஒருமைப்பாட்டையும் முன்னேற்றத்தையும் கொண்டு வரக்கூடிய சோசலிசம் பிறக்கும். திராட்சத் தோட்டத்தின் கூலியாட்களின் உவமையில் இயேசு 'முந்தினேர் பிந்தினேராவதையும்', 'பிந்தினேர் முந்தினேராவதையும், நனகு வற்புறுத்திக்காட்டியிருக்கிருர். இயேசு ஒரு வகுப்புவாதமற்ற சமூதாயத்தை விரும்புகிருர் என்றும், எல்லோரும் ஒரே குடும்பமாய் இதர தோழர்களாக வேலை செய்ய வேண்டுமென்பதையும் விரும்புகிருர்;

## என் ஏழு உத்தரவாதங்கள்

ஆ! இப்பூமிக்கு உப்பாம் நாம்
பார் மத்தேயு ஐந்து
பதிமூன்றிலிப்படித் தான்
மொழிந்தார் இயேசு

மத். 5 : 13.

பூமிக்கு ஒளியாமே நான்.
பிரகாசிப்பேனே
மத்தேயு ஐந்தெழில்தான்
வாசித்தறிந்தேனே.

மத். 5 : 14.

நான் மலைப்பட்டணமாமே,
உலகர் பார்ப்பாரே
மேல் வசனம் இப்படியே.
தேவ சொல் தப்பாதே.

மத். 5 : 14

எங்கள் நிருபம் நீங்களே
என்ருர் கொரிந்தியர்
இரண்டு மூன்று மூன்றிலே,
பூளோர் என் வாசகர்.

2 கொரி. 3 : 3.

தேவ சாட்சியாய் ஏசாயா
நாற்பத்தினு லெட்டிலே
காண்கிறபடி அசையா
சாட்சியாவேன் பூவில்.

ஏசாயா 44 : 8

இயேசு திராட்சச் செடி
நான் கொடி, நற்கனி
காய்க்க வேணும் யோவான்படி
ஐமூன்றைந்தில் நவி.

யோ. 15 : 5.

தாலந்து தந்தவர் வந்து
என் கணக்கு கேட்பார்
மத்தேயு இருபத்தைந்து
பதினைந்து நாள் பார்.

மத். 25 : 15.

## அபாயம்

கூச்சமுள்ளவன் அபாயம் வருமுன்பே நடுங்குவான்; கோழை அது வரும்பொழுது நடுங்குவான்; தைரியமுள்ளவன் வந்த பிறகு அஞ்சுவான்.

— ரிச்டேர்.

அபாயத்திற்கு அஞ்சுதல் அதைத் தடுக்கத் தூண்டுகோலாக வேண்டும்; அச்சப்படாதவன் அபாயத்தை வெல்வது அரிது.

— குவார்லெஸ்.

அபாயம் மனிதனையும் விலங்கையும் ஒரே நிலைக்குக் கொண்டு வருகின்றது; அவசியம் வரும் பொழுது எல்லோரும் ஒன்றுதான்.

— பைரன்.

அபாயத்தை அறவே விலக்குவதில் நாம் உறுதியில்லாத கோழைகள் என்று காட்டும்படி நாம் ஒருபோதும் செய்யக்கூடாது; ஆனுல், அதே சமயத்தில், தேவையில்லாத முறையில் நாம் அபாயத்திற்கு உள்ளாகும்படியும் நடக்கக்கூடாது; அதை விட அறிவீனம் வேறில்லை.

— லிவேரோ.

## "பலதும் பத்தும்"

ஆண்டவருடைய 3 வருஷச் சீவியம் வல்லமை உள்ளது.

உலகத்திலுள்ள சன்மார்க்க சாஸ்திரம், நீதி சாஸ்திரம், தத்துவ சாஸ்திரங்களில் கற்றுக்கொள்ளும் காரியங்களிலும் கூடிய முறையில் நமது ஆண்டவரின் மூன்று வருஷச் சீவியப் போதனைகளில் மனிதர் கற்றுக்கொள்ளுகிருர்கள்.

— லெக்கி என்னும் ஐரோப்பிய சன்மார்க்க சாஸ்திரி.

(*Rev. E. K. Y. Notes*).

*EDITORIAL*

## Bewilderment !

If there is one word which can adequately describe the situation prevailing in our near 10,000 schools in the island, with some 150,000 teachers and 40 lakhs of students, it is BEWILDERMENT.

The government on its part has voted 200 million rupees for education this year. Students, on their part are, spending a fantastic amount on private tuition (from Grade 6 to Grade 12) motivated by an undiminished drive to *succeed*, in the rat race.

But all this money spent by the parent eventually amounts to money thrown down the drain when it comes to Public Examinations at which all kinds of ruses are adopted by students to obtain 'grades'.

The results of as many as 500 students who sat the G. C. E. (O L) August Examination last year have been witheld as they have been reported, some for malpractices and others for hysterical conduct in the Examination Hall, inflamed by under-cover subvereions.

The five-hundred students represent the number reported and listed for deterrent punishment. But what about the number that has not been reported officially by Presiding Officers who have been mortally afraid of the consequences which in their opinion, may follow such reprisals.

Reports of leakage of question papers, ingenious tampering with identity cards and admission cards, impersonation and organised thuggery, both inside and outside examination halls, with the police in many instances (for unknown reasons) unable to contain the disturbances, constitute a sordid and dismal picture every year during examination time.

But the saddest part of the whole episode, in our view, is that these aberrations in conduct are regarded only as comic interludes and even made the subject of 'skits' broadcast over the S L B C networks.

Employers, especially in the Privte sectors have often been disillusioned with those whom they have recruited on the strength of their record of commendable 'grades'. Many of the new recruits have proved a liability in their work places.

Worse still, schools where education is imparted to the young have been, we learn, not infrequently burdened with *teachers* whose knowledge of the subjects for which they were recruited has been found to be so skimpy that school heads too begin to doubt the validity of the educational certificates.

"*Mental slums are worse than material slums*" said Sir Sarvapelli Radhakrishnan, the Indian Philosopher and statesman of revered memory.

The maxim could become a grim commentary of the schools in our country if we do not as educators and parents gird our loins and make an honest effort to arrest this drift towards chaos and catastrophe.

We are painfully aware that even some well established private denominational schools in the country today are compelled to adjust their school time table to accommodate well established tutories in their neighbourhood—a tacit acknowledgement of a parallel scheme of Education in this country.

One thing, however, is certain. The days, of "grades" at examination as a *sole* criterion for employment or higher education are not merely numbered but almost coming to an end.

The country today cannot for long stand a double stress — the stress of a devaluation in currency and a devaluation in educational standards and attainments. [Our students today attain only "grades" They know of no other attainments.]

Those who argue that private enterprises as the Private Medical College at Ragama would spell the doom of Free Education in our country should remember that private tutories have already spelt its doom and have really been useful harbingers to usher in such new enterprises. We note that there is a move made now by the government admit Engineering students to the Moratuwa University on a Fee-levying basis.

Education in Sri Lanka is bound to take a leap forward in Education for, in Nathaniel Hawthorne's words :— "A man's *bewilderment* is the measure of his wisdom".

## Danvers, Massachusetts and Tellippalai, Jaffna

*by* Rev. (Dr.) D. J. Kanagaratam

The letter was received by Rev. Daniel Poor on October 15th 1818. The letterc written by Rev. Poor are extremely interesting and throw much light on Jaffna and the condition of education in the Country at that time. He refers to the gift of thirty dollars as a pleasing token of respect from his fellow townsmen and as an expression of fraternal affection. He says Jaffna is full of "conjurers, wizards and beggers called pandarams". He says that the brahmins who are priests and leaders of the community are totally ignorant except to perform rituals. He says that "the influence of caste though not as great as upon India, is yet all pervading and pernicious. Lower castes are made to feel that they must serve their superiors. They are excluded from social intercourse and denied the privilege of entering temple on festivals.

He says that a large number of females and males are very ignorant of the letters and are excluded from every kind of mental improvement, This hopeless condition, he says, does not make him despair. The caution and suspicion of the people towards them are being overcome by friendship and good relations. After two years they have seven schools in Tellippalai and the neighbouring villages in which about three hundred boys are instructed. They learn the first rudiments of knowledge and the Tamil Alphabet. A part of their time is spent in committing to memory the Christian Catechism and portions of the Bible in their own language.

There is a very informative letter about the establishment of boarding schools. These must be established because of the bad and corrupting infiuence of the environment. He says that after much effort he had succeeded in taking twenty boys as boarders in Tellippallai. Both parents have to sign a written agreement that the children shall remain under the direction of the missionaries until it is expedient for them to leave the school. Supporting these boys is very cheap and beyond credibility. What they need are "Two or three yards of common cotton cloth wound round the waist is full handsome dress for a boy. Two or three cloths are sufficient fer a year. A pint of rice which costs one cent given in three parcels, morning, noon and night together with curry made of vegtables and spices is a generous diet. Their bedding is a mat made with the leaves of the palmyrah tree which abounds in this country."

The Rev. Daniel Poor chose three bright boys to be educated and and looked after with the thirty dollars sent from Jordon Lodge of Danvers. The first boy Subramaniam was named Jordon Lodge. Rev. Daniel Poor wished the name of his home town be remembered and named the second boy, Kathirgamar Davers. For the third boy, Kasinather he wrote to Jordon Lodge and and got the name, Ebenezer Porter. Rev. Daniel Poor writes "the capacity of these boys for receiving instruction is a ground of encouragement to us. Their response is marvelous and always reply 'we want light and more light'". On receiving this encouraging letter the Committee of Jordon Lodge decided to increase the amount and make this grant an annual contribution to be invested in a fund. The Rev. Daniel Poor replied that his educational efforts will help in erecting in Jaffna "a moral edifice, which will be more excellent in it's nature, more beautiful in it's proportions and infinitely more durable and useful than the famed monuments of Antiquity".

*( To be continued )*

## Hospital Sunday Service

The Hospital Sunday Service organised by the Jaffna Diocese of the CSI for Mission Hospitals was held on Sunday, 8-2-81 at the Uduvil Church at 5-30 p. m.

The Green Memorial Hospital, Manipay, the Mcleod Hospital, Inuvil and the Mission Hospital, Puttur participated at the Service.

A Procession into the Church of the Staff of the Hospitals — the Doctors, the para-medical staff, administrative Staff, the office staff and the nursing staff, holding lighted candles, preceded theService.

Rev. N. W. G. Sugunarajah, the Presbyter of the Uduvil Church led the service, assisted by Rev. Sam Thapoe. Rev. Joe Sarvanandhan, Vicar of St. John's Church, Chundikuli preached the Sermon. The Bible Lessons were read by Dr. Arnold of the Puttur Hospital, and Dr (Mrs.) J. Canagarajah of the Meleod Hospital, Inuvil.

Special songs were rendered by the choirs from the hospitals and by a group representing doctors' families at Manipay.

Rev. Joe Sarvanandan based his Sermon on three incidents in the Life of our Lord recorded in St. Methews Gospel, Chapter 8— Jesus encounter with the Gedarene demoniac, the storm at sea that made the disciples to panic and the healing of a man with the witherd hand in the Synagogne on a Sunday amidst discussions and debates.

Mission Hospitals, said Rev. Sarvanandan are the greatest legacy left behind to us by the American missionaries. They are institutions in which human agencies serve suffering humanity from 'authority' they derive from a higher source, often in the context of difficult circumstances.

## Cancer Hospital to be sited at Tellippalai

A two-storeyed Block will soon be put up on the grounds of the Tellippalai Government Hospital, to house the Jaffna Cancer clinic.

The top floor will accommodated the cobalt unit and the goround floor will be eased as the clinic.

The family of the late Mr. G. G. Ponnambalam Q. C. has come forward to donate the bulk of the amount needed. The memorial donation will amount to Rs. 700,000.

The others donors towards this humanitarian project are :— The Jaffna Lions Club—Rs. 50,000 The Jaffna Rotary Club — Rs. 50,000 and the Northern Cancer Protection Society — 100,000.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 13th February, 1981.